02.05.2019

**பத்திரிக்கை செய்தி**

**கடந்த (2018-19) கல்வி ஆண்டில் அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளைச் சேர்ந்த 31,178 மாணவ மாணவியர்கள் மெட்ரோ இரயிலில் கல்விப் பயணம்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயிலைப் பற்றியும் அதில் உள்ள வசதிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்தும் அரசு மற்றும் மாநகராட்சி ப் பள்ளிகளின் மாணவ மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சியில் சென்ட்ரல் மெட்ரோவில் இருந்து விமான நிலையம், ஏ.ஜி-டி.எம் .எஸில் இருந்து விமான நிலையம் மற்றும் வண்ணாரப்பேட்டையில் இருந்து விமான நிலையம் வரை மெட்ரோ இரயிலில் கல்விப் பயணம் ஏற்பாடு செய்து அழைத்து செல்லப்படுகின்றனர்.

கல்விப் பயணங்கள் மாதம்தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை மாவட்டத்தி ல் அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகள் மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர் , சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு 2018-19 ஆம் கல்வியாண்டில் கல்விப் பயணங்கள் அழைத்து செல்லப்பட்டது. மெட்ரோ இரயிலின் சிறப்பு அம்சங்களை பற்றி மாணவர்களுக்கு விளக்கப்பட்டன.

கடந்த கல்வி ஆண்டில் 60 பள்ளிகளில் இருந்து மொத்தம் 31,178 மாணவ மாணவியர்கள் மெட்ரோ இரயிலில் பயணித்து பயன் பெற்றனர்.

வரும் (2019-20) கல்வியாண்டிலும் அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவ மாணவியர்களை மெட்ரோ இரயிலில் கல்விப் பயணம் அழைத்து செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.